உ
கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-ருo.] விஜய௵—பங்குனி௴ [பகுதி-ரு.
Vol. 50. March—April 1954. No. 5.

சிந்தாமணி விளக்கம்: சீவகன்பெயர்

திரு. நா. அப்பனையங்கார், தலைமையாசிரியர், தமிழ்ச்சங்கக்கலாசாலை.

(104-ம் பக்கத் தொடர்ச்சி)

இனி, கோவிந்தையாரிலம்பகக் குறிப்புச் சீவகன்பெயர் விளங்குதல் சிறிது விவரிக்கத் தகும். அவன் தான் நல்வாழ்வு பெற்றான்; பிறர் உயிர்பிழைக்கவும் உதவினான். இவ்வாறாகிய சீவகப் பெயரின் இருவகைக் காரணங்களும் இதில் இணைந்து காண்கின்றன.

நாமகளைக் கூடிய பொழுதே, வெற்றிமகளும் புகழ்மகளும் அவனை மேவ விரும்பினர் என்று மேலே சொல்லப்பட்டது. அவ் விருப்பம் இடையறவுபடாது உடனடியாக நிறைவேறிற்றென்பது, இதில் விசதமாக வெளியாகின்றது. இவ்வாறு விச்சைகள் பயின்ற அப்பொழுதே அவன் அதன் வினைபயன் துய்த்த அருமையை,

> நெஞ்சம் புணையாக் கலைமாக்கடல் நீந்தி யாங்கே
> வஞ்சம் மறவர்நிரை வள்ளல் விடுத்தவாறும் (11)

என இந்நூலின் பதிகம் பாராட்டாநின்றது. 'கற்றபொழுதே பயன் கோடல் அருமையின் ஆங்கே என்றார்; மறவரைக் கொல்லாது உயிரை வழங்குதலின் வள்ளல் என்றார்'; என்பது நச்சினார்க்கினியர் உரை. இதனால் சீவகன் வீரமும் அருளும் மேம்பாடெய்தி, வெற்றியும் புகழும் விளக்கமுற்றன என்பதாம்.

கதாநாயகன் ஆக்கம், பிரதிநாயகன் அழிவு ஆகிய இரண்டும் அடிப்படையில் இங்குக் கால்கொள்ளுகின்றன. இவை சிறிது சிறிதாகப்

பிணைந்து வளர்தல், எஞ்சிய இலம்பகங்களில் பரக்கக் காணலாம். சிவகன் செம்மைசேர் உள்ளத்தின் சீர்மை, கட்டியங்காரன் கருமைதோய் நெஞ்சத்தின் கள்ளம், இரண்டும் ஒன்றுடொன்று அடுத்து இதில் காட்சியளிக்கும் அழகு கருத்தினில் இருத்தற்பாலது.

இனி இதன் கதைநிகழ்ச்சி மிகச் சுருக்கமுடைத்து. அரசன் கட்டியங்காரன் ஆநிரைகளைக் காட்டில்வேடர் கவர்ந்து கொண்டனர். அதனால் அந் நிரைகாவலர் தம் தலைவன் நந்தகோனுடன் மத்தெறி தயிரின் மறுகிச் சுழன்று, அதனைத் தம் அரசனுக்கு வாயில்காவலனால் அறிவித்தனர். அதுகேட்ட அரசன் அவ் வாயிலோனைக் கடுஞ்சினங் கொண்டு கடிந்தனன். கொடுங்கோலனாகையால் அவனுக்குக் கோபம் எளியார்மேலாயிற்று. இது,

> ஆக்கரிய மூக்குஉங்கை அரிந்தாரென்று உரைத்தாரை
> நாக்குஅரியும் தயமுகனார் நாகரிகர் அல்லாமை
>
> (இராமா. ஆரண்ய. சூர்ப்ப. 125.)

என்று இராவணன் கொடுமை குறித்த இராமாவதாரப் பகுதியை நினைப்பிக்கின்றது.

பின்னர் அக் கட்டியங்காரன், தன் மைந்தர் நூற்றுவரையும் மைத்துனன் மதனனையும் 'விரையச்சென்று நிரைமீட்க' என விடுத்தனன். அவரும் பெரும்படை திரட்டி மறவருடன் பொருது, அவர் கையில் அம்பெல்லாம் தம் மெய்யில் வாங்கிக்கொண்டு தோல்வியுற்று மீண்டனர்.

அம்புகொண்டு அரசர் மீண்டார் ஆக்கொண்டு மறவர் போனார் (489) என்ற பழிச்சொல் எங்கும் பரந்தது. அதனைக் கண்டும் கேட்டும் கட்டியங்காரன் வாளாஇருந்தனன்.

அப்போது நந்தகோன் மிக்க வருத்தமடைந்து, நிரைபெயர்த்துத் தருவோர்க்குப் பேரழகுவாய்ந்த தன் பெண் கோவிந்தையைப் பரிசாகத் தருவதாக முரசறைவித்தான். படை நான்கும் மிகப் படைத்த வீரர் பலர் அம் மாநகரில் வாழ்ந்தனரெனினும், அவர் யாவரும் வேடரை வெருவி, அக் கன்னியின் விருப்பம் கைவிடலாயினர்.

இந் நிலையில் ஊர் பரிவுற்றதைச் சீவகன் செவியேற்றலும் வருந்தினன். 'நன்பால் பசு பெண்டிர் பாலர் பார்ப்பார் என்பாரை ஓம்பென்

எனின், நான் அக் கொடிய கட்டியங்காரனைக் கடவேன்' என அவன் நெஞ்சினில் வஞ்சினம் எழுந்தது. அப் பொழுதே அவன் தேரைப் பண்ணமைத்து, போர்க்கோலம் பூண்டு புறப்பட்டான்.

அவன் வேடரிடம் கொண்ட வெற்றி மிகவும் விநோதமானது. கடல்நீரில் முதலைபோலக் காட்டில் மறவர் இடவலி படைத்தவர். ஆயினும் தேர் ஒன்றே திசை முழுதும் முகம்செய்யுமாறு செலுத்தும் ஆற்றல்வாய்ந்த சீவகன், வேடரை அத் தேர் வெள்ளமாகச் சூழ்ந்து வளைத்துக்கொண்டாற்போலத் தன் கலைவன்மைபால் காட்டினன். அதுகண்டு அஞ்சின அவர், தம் நெஞ்சில் அறம்என மறமும் கைவிட்டனர்.

உடனே அக் கானவர் கலைந்தோட, அவன் கணைகளை ஏவினன். ஆநிரை மீண்டது. ஆயர் ஆரவாரித்தனர். சீவகன் திண்டோள் ஒன்று முடங்கிற்று; ஒன்று நிமிர்ந்தது. அப்போது அம்புகள் அம் மறவர் மீது மழைத்தாரைபோலத் தூவின. அதனால் அவர் மடவார்மனம் போல் நிலையில்லாதவராய்க் கணத்துள்ளே காட்டில் மறைந்துவிட்டனர்.

அவர்க்கு அம்புகள் மழைத்தாரை போன்றன என்றது, அவர் உயிரினும் உடலினும் ஊறுசெய்யாமை உணர நின்றது. அவர் தனக்கு நிகரான பகைவரல்லாமையாலும், அப்போது தனக்கு அரசாட்சி இன்மையாலும், அவரைக் கொல்லலாகாதென்று உயிர்பிழைக்க உதவினவன், பிறரைச் 'சீவிக்கச் செய்தமையால் சீவகன்' என்ற தன் பெயர்க் காரணம் விளக்கவைத்தனன். இவ்வாறே, தான் 'சீவிக்க வல்லமையால் சீவகன்' என்ற மற்றொரு காரணமும் இவ் வரலாற்றில் தெற்றென விளக்கக் காணலாம்.

தன்தேர்முழக்கொலியும் (449) சிலைநாணொலியும் (454) கொண்டே சீவகன் வேடரை வெருட்டித் தொறமீட்ட செய்தி விளையாட்டுப்போன்றது என்பர்.

மொய்அமர் நாள்செய்து ஐயன் முதல் விளையாடினனே (448)

என்ற தேவர் கூற்றுச் சிந்தனைக் குரியது.

இங்கு 'மொய் அமர்' என்றது, கட்டியங்காரனொடு சீவகன் பின்பு நிகழ்த்த இருந்த பெரும்போரைக் குறிப்பான் அறிவுறுத்தி நின்றது.

'நாள் செய்து' என்றது, அதற்கு முன்னதாக இப்பொழுதே நாள்கொண்டு என்றவாறு. யாரும் தாம் பின்னர்ப் பெரியஅளவில்

செய்து முடிக்க விரும்பின காரியங்களை, முன்னர் நல்லநாளிலே சிறிய அளவில் செய்து தொடங்கிக்கொள்ளுதல் 'நாள்செய்தல்' எனப்படும். அவ்வாறே சீவகனுடைய இப் போர்ச்செயலும் இங்கே சிறப்புற வாய்த்தது என்பதாம். இங்ஙனம் அவன் நாள்செய்ததுதானே, பகைவன் நாள் உலந்தானுகச் செய்ததும் ஆயிற்று என்று குறிப்பு. இது மேல் 'ஆளற்றமின்றி' எனனும் கவியில் (458) 'நாளும்முலந்தான்' எனக் கட்டியங்காரன் விசேடிக்கப் பெறுவதால் விளங்கும்.

—மன்னர்

உடைநாள் உலந்தனவால் ஓதநீர் வேலிக்
குடைநாள் இறைவன் கொள (புறப். வஞ்சி .3)

என வஞ்சிமன்னன் நாள்கொள்ள, காஞ்சிமன்னர் நாள் உலந்தன; என்று இங்ஙனம்வரும் வெண்பாமாலையில் இப்பொருள்நயம் புலப்படுகின்றது.

இனி 'ஐயன்' என்றது, பேராண்மையோடு ஊராண்மைமிக்கு, போர்ப்படையுள்ளே உயிர்க்கொடை புரிந்த ஒப்புயர்வற்ற உத்தமக்குரிசில் சீவகன் என்பது உணர்த்தியவாறு.

'முதல்' என்றது, கலைகள் நிரம்பினவுடனேயே கைச்சிலை எடுத்து, அவன் முதன்முதலாக இயற்றிய கன்னிப்போர் இது என்று பாராட்டியவாறு.

'விளையாடினன்' என்றது, ஐம்பத்தாறாயிரம் மறவர்களிடையிலும் சீவகன் ஒருவனே நின்று, 'ஆயிரம் காக்கைக் கோர்கல்' என்பது போல அரிதின் முயலாது அநாயாசமாக, இளஞ்சிறுவர் தம்முள் படைவகுத்து இயற்றும் இன்ப விளையாட்டுப் போலப் போரெதிர்ந்தோர்க்குப் புண்உண்டாகாதவாறு, கறங்குபோல் சுழலத் தேரினைக் கடவியும் மழைபோல் பொழிய வாளிகள் தூவியும் கண்டோர் வியக்கும் காட்சியின் மேதக, போர்க்கலை விநோதம் புலப்படுத்தினன் என்றவாறு.

இங்ஙனமாய சீவகனுடைய வெற்றியைக் கண்டு நகரமாந்தர் யாவரும் மகிழ்ந்தனர். எனினும் அது கூறக்கேட்ட கட்டியங்காரன் கடுஞ்சினங்கொண்டு வாய்வாளுயினன். இவ் வெகுளியின் காரணம் விசித்திரமானது. போர்க்களத்தில் படைக்கலங்களால் ஒருவருமே புண்பட்டாரில்லை.

வாள்வாயு மின்றி வடிவெங்கணை வாயு மின்றி (454)

என வரும் சிந்தாமணி இதற்குச் சிறந்த சான்று.

ஆயினும் இது கட்டியங்காரன் நெஞ்சில் கடும்புண் ஆக்கியது. சீவகன் ஓர் ஆளுக்கும் ஊறு இன்றாக நிரைமீட்டான் என்று கூறிய வுடன், அவனுக்கு வாளெறிந்த புண்ணில் வேலெறிந்து முறிந்தது போல் இருந்ததாம். அதனாலே தான் அவனுக்குச் சீற்றம் எழுந்தது என்று சிரிக்கப்பேசுகிறார் சிந்தாமணி கவி. இது சீவகன் செய்த குற்ற மாதல் சிறிதும் செல்லாதன்றே?

ஆளற்ற மின்றி அலர்தாரவன் தோழரோடும்
கோளுற்ற கோவன் நிரைமீட்டனன் என்றுகூற
வாளுற்ற புண்ணில் வடிவேலெறிந் திற்றதேபோல்
நாளுற் றுலந்தான் வெகுண்டான்நகர் ஆர்த்ததன்றே (455)

என்ற செய்யுட் பொருள் சிந்திக்க இனியது.

'ஆள் அற்றம் இன்றி' என்றது, கறவை உய்த்த கள்வர் ஐம்பத் தாறுயிரவர் படையாளரில் ஒருவர்க்காயினும் சிறிதேனும் ஊறு உண்டா காமல் என்றவாறு. ஆளுக்கும், அற்றமும் என விரித்தல் வேண்டும். அற்றம்-குற்றம்; இங்குப் போரில் நேரும் புண்தழும்பு குறித்து நின்றது. கானவர்க்குச் சிறிதும் வடுவில்லையாயினும், கட்டியங்காரனுக்கு வாளும்வேலும் எறிந்தாற்போல வடுப்பட்டது என்ற கவிசாதுரியம் கருதத்தக்கது.

'அலர்தாரவன்' என்றது, புதிதாகப் பூத்து மணக்கும் புகழ்மாலை புனைந்த சீவகன் என்றவாறு. வெற்றிமடந்தையும் சேரச் சூட்டிய மாலை இது.

'தோழரோடும்' என்றது, பதுமுகன் முதலான நண்பர் பலருட னும் என்றவாறு. இவர் போர்புரிந்திலாராயினும் ஒப்புக்குத் தன்பக்கத் தில் படையாளாக வைத்துக்கொண்டு, இவர்மீது வேடர் விடும் படை களை விலக்கி விளையாடற்குச் சீவகன் இவரையும் உடன்கொண்டு நின்ற னன் என்பதாம். 'தோழரோடும் நிரை மீட்டனன்' என இயையும். தோழரையும் காத்தான், தொறுவையும் மீட்டான்; என அவன் போராற் றல் வியந்து பேசியவாறு. தோழருக்குப் போரின்றிச் சீவகன் ஒருவனே பொருதனன் என்பது,

ஒன்று தேரினும்...ஒருவன் என்செயும் (417)

என்ற மறவர்கூற்றால் அறியலாகும்.

'கோளுற்ற' என்றது, 'ஏட்டைப் பசியின் இரை கவ்விய நாகமே போல்' (416) மீட்டல் அரிதாம்படி, வேடரால் கவர்ந்துகொள்ளப்பட்ட என்றவாறு. 'கோளுற்ற நிரை மீட்டனன்' என இயையும். 'கெட்ட மாடு தேடுமுன்னம் எட்டுமாடு தேடலாம்' என்னும் உலகவழக்கு, இழந்தபொருள் மீட்டல் இயலாதென்று கூறும். இங்ஙனம் இயலாத தனையும் சீவகன் இயற்ற வல்லனாயினன் என்று குறிப்பு.

'கோவன் நிரை' என்றது, நந்தகோனுடைய பசுக்கூட்டத்தை என்றவாறு. பசுக்காத்தலில் கட்டியங்காரனுக்கும் இல்லாத பரிவு இவனுக்கு இருந்தது. அரசன் நிரைமீட்டல் இகழ்ந்து வாளா இருந்த பின்னும், அது செய்வார்க்குத் தன் கன்னியைத் தந்தாயினும் காப்பது கடன் என அவன் கருதினனன்றே? கோவன்-கோபன், இடையர் தலைவனான நந்தகோன்; 'அன்றி அரசனும் ஆம்' என்பர் நச்சினார்க்கினியர்.

'மீட்டனன்' என்றது, பெயர்த்துக் கொடுவந்து தந்தான் என்றவாறு. ஆ தந்து ஓம்பல் ஆகிய போறச் செயலைப் பிறழாது முற்றினன் என்பதாம்.

'என்று கூற' என்றது, என்று இங்ஙனம் மகிழ்ச்சிக்குரிய செய்தியை வாயிலோன் அரசனிடம் சென்று சொல்ல என்றவாறு. கூறற்கு வினைமுதல் 'வாயிலோன்'; அன்றி 'ஆயர்' எனினும் ஆம். 'கூற வெகுண்டான்' என இயையும். கட்டியங்காரனுக்குச் சீவகன் மீது எழுந்த சீற்றம், அவனுடைய வெற்றியைத் தனக்குத் தெரிவித்தவர் அளவும் சென்று நிகழ்ந்தது; மரபுமாட்சிப்பட்ட மன்னர் குலத்தவ னல்லாமையாலே, இங்ஙனம் விளையாத நிலத்தும் அவனுக்கு வெகுளி விளைந்தது. நிரை, கொள்ளப்பட்டது கூறினபோதும் வெகுண்டான்; மீட்கப்பட்டது கூறினபோதும் வெகுண்டான்: எல்லா நிலையிலும் இவனுக்கு வெகுளி விட்டுநீங்காது உடன்பிறந்ததே போலும்!

'வாளுற்ற புண்ணில்' என்றது, வாள்பட்டு வெட்டின புண்ணில் என்றவாறு.

'வடிவேல் எறிந்து இற்றதே போல்' என்றது, கூரிய வேல் எறியப்பட்டு, உள்ளே முறிந்துநின்றாற்போல என்றவாறு.

இப் படைகள் தன்மீது பாய்ந்தில ஆயினும், கட்டியங்காரன் தானாகவே இக் கடுந்துன்பத்தை வருவித்துக் கொண்டான். பொறுமை

யால் புழுங்கினோர்க்கு மனம் புண்படுதல் இயற்கையே அன்றோ? தன் தோல்வி வாளெறிந்தது போன்றது; அதன்மேலும் சீவகன் வெற்றி, வேலெறிந்து முறிந்தது போன்றது. இந் நினைவு இடையறாது நிலை நின்று இறுதிவரை அவனைத் துன்புறுத்திற்று. ஆதலின் 'இற்றதே போல்' என்றார். இறுதல்-முறிதல். புண்ணிடைப் புகுந்து முறிந்த இரும்பு, கடைநாளளவும் இடையூறுபுரிதல் மிகவும் வெளிப்படை. சீவகன் முதல்வெற்றியாகிய இது, அவனுக்கு முற்றியவெற்றியாய் நிலைநின்று, அவன் பகைவன் கட்டியங்காரனை முன்னதாகவே உயிர் மடியச் செய்தது என்பர்.

> முலைமுதல் துறந்த அன்றே மூரித்தா ளாளி யானை
> தலைநிலம் புரள வெண்கோ டுண்டதே போன்று தன்கைச்
> சிலையிடம் பிடித்த ஞான்றே தெவ்வரைச் செகுத்த நம்பி (2554)

என்னும் இலக்கணையாரிலம்பகம் இதற்குச் சான்று. 'யானைக்குக் கோட்டைப் பறித்த பின்னரும் சிறிதுபொழுது பதைத்து உயிர்போமாறுபோல, நிரைமீட்ட அன்றுதொட்டும் இவன் நமக்குப் பகையாவன் என்னும் கருத்துடனே பதைத்துப் பட்டான்': என்பது இங்கு நச்சினார்க்கினியர் விரித்தெழுதிய விசேடவுரையாகும். சீவகன் தான் வாழ்வுபெறச் செய்த இம் முயற்சியே, அவனுடைய பகைவன் வாழ்வு கெடச்செய்த முயற்சியாகவும் முடிந்தது. இது நெற்செய்யப் புல் தேய்ந்தாற் போன்றதாம்.

'நாளுற்றுலந்தான்' என்றது, இவ்வாறு தன் வாழ்நாள் முடிவை, இப்பொழுது முன்னதாகவே தேடிக்கொண்டவன் என்றவாறு. 'நிரை மீட்டற்கு வெகுண்டமையால், தேவர், நாளுற்றுலந்தான் என்று ஒரு பெயரிட்டார்; சீவகன் அரசவுரிமை எய்துநாள் வந்துறுதலின், தனக்கு இழைத்த நாளுற்றுலந்தவன் என்றுமாம்' என்பர் நச்சினார்க்கினியர். 'நாளுலந்தான்' என்று பிரதிநாயகனுக்கு இட்ட இப் பெயர், 'சீவகன்' என்று கதாநாயகனுக்கு இட்ட பெயருடன் நேர் மறுதலையான பொருள் பயப்பது. நல்வாழ்வு மேன்மேலும் மிகுபவன் சீவகன்; அது நாள்நாளும் குறைபவன் 'நாளுலந்தான்': என இவ்வாறு இரு பெயர்ப் பொருளும் விரித்துரைத்துக் கொள்ளவேண்டும். கொள்ளவே, 'நாளுலந் தான்' என்றதில் அமைந்த நயம் ஆழ்ந்து நுகர்ந்து அகமகிழற்பாலதாம்.

'வெகுண்டான்' என்றது, இவ்வாறு காரணமின்றி இடமல்லா இடத்தில் எழுந்த இழிகுணத்தொழிலான கோபத்தைத் தன்னுள் அடக்கிக்கொள்ளவும் ஆற்றாமல், மிகவும் வெளிப்படையாக விளங்கச் செய்தான் என்றவாறு.

'நகர் ஆர்த்ததன்றே' என்றது, நற்காலமாக, இவ் விழிசெயலை நகரமாந்தர் பலர் நன்கு அறிந்திலர்; அவர் நிரைமீட்சிபற்றி எழுந்த மகிழ்ச்சியரவத்திலே மூழ்கினர் என்றவாறு.

இங்ஙனம் சீவகன் ஆநிரைமீட்ட இவ் அஹிம்ஸைப்போர், அவன் பகைவன் கட்டியங்காரனுக்குக் கடுமையான ஹிம்ஸையாகவும் முடிந்தது. பிறவுயிர்கள் பிழைத்து வாழ உதவினவன் தன் அரசவாழ்வுக்கு ஆக்கமும் தேடினன்; என இவ் இருவகையாலும் சீவகப்பெயர்க் காரணம் செவ்விதின் விளங்கலாயிற்று.

இனி, சீவகன் வெற்றிக்குப் பரிசாக, தன் மகள் கோவிந்தையை மணந்துகொள்ளுமாறு, நந்தகோன் அவனைப் பன்முறை வேண்டினன். 'பசுவைக் காவாவிடில் நான் பாவியாகக் கடவேன்' என்ற கடமையுணர்ச்சி தூண்ட அவன் கணநிரை பெயர்த்ததன்றி, கன்னியின் மீது எழுந்த காதலால் அன்று. தன் குலத்துக்கு ஒவ்வாத கலப்புமணம் செய்வதை அவன் தவிர்க்கவே விரும்பினன். உயிரினும் சிறந்த ஒழுக்க நிலை அதனால் பழுதுபடும் என்பது அவன் உறுதியான கடைப்பிடி. முருகனும் கண்ணனும் முறையே வள்ளியையும் நப்பின்னையையும் மணந்த ஆன்றோர் ஒழுக்கம் இதற்கு ஆதாரமாகக் காட்டப்பட்டது. அது தேவர்க்கு ஆகுமாயினும் மனிதர்க்கு ஆகாதென்று சீவகன் மதித்தனன்.

பின்னரும் அப் பெண்ணின் பெருவாழ்வில் ஆக்கம் கருதி, தன்னின் வேறல்லாத நண்பன் பதுமுகனுக்கு என்று தன் அங்கையில் நீரேற்று, அவளை அவனுக்கு அளித்தனன் சீவகன். நந்தகோனும் இதனை நன்றென்று உவந்தனன். மணவினை இனிது நிறைவேறியது. யாவரும் மகிழ்ந்தனர். ஒழுக்கநெறி வழுவாமையே சீரிய உயிர்வாழ்க்கை என்று நிலையிட்டு, இவ்வாற்றானும் சீவகன் தன் பெயர்ப்பொருள் தெள்ளிதின் விளக்கினன் என்னலாம்.

[தொடரும்]

ஸ்ரீ:

இராமாவதாரத் தனிச்செய்யுள் உரை

திரு. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள், B.A., B.L. மதுரை.

சுந்தரகாண்டம், பிணிவீட்டுப்படலம்—122.

நொய்ய பாசம் புறம்பிணிப்ப நோன்மை யிலன்போல் உடல்நுணங்கி
வெய்ய அரக்கர் புறத்தலைப்ப வீடும் உணர்ந்தே விரைவில்லா
ஐயன் விஞ்சை தனை அறிந்தும் அறியா தான்போல் அவிஞ்சையெனும்
பொய்யை மெய்போல் நடிக்கின்ற யோகி போன்றான் போகின்றான்.

இதன் பொருள்: நொய்ய-இலேசான; பாசம்-கட்டு, கயிறு; புறம்-மேலே; பிணிப்ப-கட்ட; நோன்மை-அதைத் தாங்கும் திறன்; இலன்போல்-இல்லாதவன் போல; உடல் நுணங்கி-மெய் துவண்டு; வெய்ய அரக்கர்-கொடியவரான ராக்ஷஸர்கள்; புறத்து-பக்கத்தில் சுற்றிலும்; அலைப்ப-அல்லற்படுத்த; வீடும்-இதினின்று விடுவித்துக் கொள்ளும் வகையையும்; உணர்ந்தே-தெரிந்துகொண்டே; விரைவுஇல்லா-அதற்கு அவசரப்படாத; ஐயன்-அநுமான்; விஞ்சை தனை-உயர்ந்த வித்தையை; அறிந்தும்-தெரிந்துகொண்டும்; அறியாதவன் போல்-தெரிந்துகொள்ளாதவன் போல; அவிஞ்சை எனும்-அறியாமை என்னும்; பொய்யை-பொய்யான செய்கையை; மெய் போல்-தன்னுடைய உண்மையான செய்கைபோல; நடிக்கின்ற-செய்து காட்டுகின்ற; யோகி போன்றான் போகின்றான்-யோகிக்கு ஒப்பானவனாகிப் போகிறான்: என்பதாம்.

இனி, இதனை யோகிக்குப் பொருந்தப் பொருள் கொள்ளுதல் வருமாறு:—நொய்ய-வலிமையற்றுப் போன; பாசம்-பற்று; புறம்-(அகத்திலின்றி) வெளியே; பிணிப்ப—தன்னைச் சுற்றியிருப்ப; நோன்மை இலன் போல்-தவவலிமை இல்லாத சாதாரண மனிதனைப் போல்; உடல் நுணங்கி-சரீரம் (விரதங்களால்) வாடி; வெய்ய-கொடுமையான; அரக்கர்-(தீச் செயல்களில் மனத்தை

இழுக்கும்) அசுரராக்ஷஸ அம்சங்களையுடைய புலன்கள்; புறத்து-வெளியிலிருந்து; அலைப்ப-துன்புறுத்தி இழுப்ப; வீடும்-சரீரத்தி லிருந்து ஆத்மாவை விடுவித்துக் கொள்ளும் வழியையும் (மோக்ஷோபாயத்தையும்); உணர்ந்தே-தெரிந்துகொண்டே; விரை வில்லா-(சரீர அவசானத்திற்கு முன்னே) அங்ஙனம் செய்வதில் அவசரப்படாத; விஞ்சைதனை-(ஆத்ம ஸாக்ஷாத்காரமாகிய) மெய் யுணர்தல் வித்தையை; உணர்ந்தும்-முற்றவும் தெரிந்திருந்தும்; அறியாதான் போல்-அந்த வித்தையைச் சிறிதும் அறியாத சாமா னிய மனிதனைப் போல; அவிஞ்சை எனும் பொய்மை-அஞ்ஞான தசை என்னும் (பொய்யான உலகத்தில் மயங்கி நிற்கும்) நிலையை; மெய்போல் நடிக்கின்ற—தானும் உண்மையாகக் கொண்டு ஒழுகு பவன் போல வெளிப்படையில் காட்டிக்கொள்ளுகின்ற; யோகி-உலக நடையில் நீங்காத தவயோகி;—என்பதாம்.

'அநுமன் வாலில் தீயிட்டு நகரத்தைச் சுற்றி எல்லை கடத்தி விடுங்கள்' என்று இராவணன் அரக்கர்களுக்குக் கட்டளையிட்டான். உடனே இந்திரஜித்து ப்ரஹ்மாஸ்திரத்தை மீட்டுக் கொண்டான். அரக்கர் கயிறுகளால் அநுமனைக் கட்டினார்கள். இலங்கையில் மக ளிர் மங்கல நாண்கள் மட்டும் தப்பின; அன்றி மற்றெல்லாக் கயிறு களும் இட்டுக் கட்டப்பட்டன.

அப்போது அநுமன் 'தெய்வப்படையை என் புயவலியால் கடந்தேன்' என்னும் இழுக்கு ப்ரஹ்மாஸ்திரத்துக்கு வாராமல், அது தானே கழன்றதென்று மனங்குளிர்ந்தான். தான் தர்மநிஷ்ட னாதால், அதுவும் பகைவர் தன் விரதத்துக்குச் செய்த ரக்ஷண மென்று கொண்டு, அதை ஒரு வெற்றியாகவே கருதினன். பின்ன ரும் அவன் 'சுடுவிக்க' என்று இராவணன் இட்ட கட்டளை 'இந்த ஊரைச் சுடுக' என்று தனக்கு உரைத்ததாகத் துணிந்து கொண் டான். இவ்வாறு நடுவுநிலைமை தோன்ற அமைதியோடு விஷய ஸந்தர்ப்பங்களை ஆராய்ந்து குற்றமற்றவனாகிய அநுமன் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தான். இவ்வளவும் இதற்கு முன்னுள்ள பாடல் களில் கண்ட கதைநிகழ்ச்சிச் சுருக்கமாகும்.

இனி, இவ்வித மனநிலையில் உள்ள அநுமனை வாலில் கிழிசுற்றி நெய் தோய்த்துத் தீக் கொளுத்துவதற்காக அழைத்துப் போகும் போது, அவன் சென்றதை யோகியின் உலகநடை ஒழுக்கத்தோடு ஒப்பிட்டு உடனிலைச்சிலேடையாகப் பாடப்பெற்றது இவ்வழகிய செய்யுள். நூல்களில் கூறிய முறை வழுவாமல் ஒழுகி ஐம்புலன் களை அடக்கி, சாந்தி தாந்தி சமை தமைகளால் மெய்யுணர்வுபெற்று மேம்பாடடைந்த பெரியோர்கள் தாங்கள் நினைத்த மாத்திரத்தில் இந்தச் சரீரத்தை விட்டு நற்கதி அடையக்கூடிய திறன் உடையவர். ஆயினும் பிறவுயிர்களிடத்தில் அன்பின் மிகுதியால் அவைகளுக்கு உதவ எண்ணி, சாதாரண மனிதர்போல் நடித்து, இன்புறுவாரோடு சிரித்தும் துன்புறுவாரோடு அழுதும் உலகில் நடமாடி வருவர். இறைவனிடத்தில் ஒன்றிநிற்கும் அவர்கள் மனத்தை மாயையும் புலன்களும் உலகப்பொருள்களில் இழுக்க வல்லன அல்ல. இது பற்றியே 'செய்ய பாசம் புறம் பிணிப்ப' என்று சொல்லப்பட்டது.

விரதாதிகளால் இளைத்து அத்யாத்ம நிஷ்டையில் திருப்பப் பட்டிருக்கும் அவர்கள் சரீரத்தை, உணவில்லாமல் இளைத்த தென்று உலகத்தோர் கருதுவர். இதனாலேயே 'நோன்மையிலன் போல் உடல் நுணங்கி' எனப்பட்டது.

இவர்கள் செல்லும் இடமெல்லாம் புலன்கள் இவர்கள் பொறி களைத் தாக்குதல் தவிரப் பொறிகளைத் தம் வசம் இழுக்கமாட்டா என்ற குறிப்புத் தோன்ற, 'வெய்ய அரக்கர் புறத்து அலைப்ப' எனப்பட்டது.

உலகத்தில் பலரையும் உய்யக்கொள்ளுவதற்காக யோகிகள் விரைவில்லாதவராகிறார்கள். இராமகார்யத்துக்கு ஸாதகமாய் இலங்கையைத் தீமூட்டும் நோக்கத்தோடு அநுமன் இந்தக் கயிறு களுக்கும் கட்டுப்பட்டவன் போல் நடிக்கிறான். இவன் தீக்கொளுத் தும் இலங்கைச் செல்வம்தான் மாயையும் அவித்யையும் ஆகும். உண்மைப் பொருளை உபதேசிக்கும் யோகியும் தன் சீடனுடைய அஞ்ஞானத்தால் நிறைந்த மனக்கோட்டைகளைப் பொசுக்கி மெய் யுணர்வளிப்பதற்காகவே சாதாரண மனிதனைப் போல வளைய வருகிறான்.

அஞ்ஞானம் ஒழிந்து ஞானத்தைப் பெறும் அதிர்ஷ்டம் வாய்த்த மனிதன், தன்னுடைய கல்வி கேள்வி அறிவு ஒழுக்கங்களால் தன் அஞ்ஞானத்தைப் பொசுக்கும் ஞானாக்னியைத் தானே உண்டாக்குகிறான். ஆசாரியன் அதற்கு உதவிபுரிபவனாக எது எதை எந்த எந்த முறையில் சுட்டெரிக்க வேண்டுமென்று காட்டித் தருகிறான்.

இங்கேயும் அரக்கரூரை அழிக்கப் போதுமான கிழியும் இழுதும் அநுமன் வாலில் சுற்றி, வேண்டிய தீயையும் அரக்கரே கொளுத்தி உதவுகிறார்கள். அநுமன் அதன் உதவியால் அரக்கரூரைச் சுட்டு உதவுகிறான்.

தனக்கு நிஷ்டைகள் ஸித்தியாவதற்கு இன்னின்னவை தடையாயுள்ளன என்று சிஷ்யன் சொல்லவும், அத் தடைநீக்க வேண்டிய உபாயங்களை நல்ல ஆசாரியன் சொல்லித் தருவன். அதுபோல் இந்த அரக்கர்களே அந்த மாயாபூயிஷ்டமான தெருக்கள் சந்துகள் மூலைமுடுக்குகள் எல்லாவற்றையும், ஸச்சிஷ்யர்கள் போலத் தாமே அநுமனுக்குக் காட்டித்தருகிறார்கள். அவ்விதம் காட்டித்தருமாறு 'சுட்டு நகரைச் சூழ் போக்கி' என இந்த மாயா ராஜ்யாதிபதியான இராவணனே கட்டளையிடுகிறான்.

அவனைச் சுற்றியுள்ள மாயை ஒழிந்து அவனும் உஜ்ஜீவிக்குங் காலம் நெருங்கிவிட்டதாதலால், இந்த ஆசாரியனாகிய அநுமன், விரைவின்றி, எல்லா வுயிர்களையும் உய்யக்கொள்ள இவ்விதம் செல்கிறான் என்பதைக் கம்பர் இங்ஙனம் புனைந்துரைத்தார். இன்னும் முன்பின் பாடல்களைத் தொடர்ந்து நோக்க, பற்பல நயங்கள் தோன்றும் பண்பில் இப் பாடல் அமைந்திருப்பது மிகவும் பாராட்டத் தக்கது.

சங்ககால மன்னர்கள்

வித்துவான், திரு. கு. குமாரஸ்வாமி ஆச்சாரிஅவர்கள், M.A. விரிவுரையாளர்,
தமிழ்க்கல்லூரி, மயிலம்.

(110-ம் பக்கத் தொடர்ச்சி)

வடுகர் மரபினர்

இவர்கள் வேங்கடமலைக்கு அப்பாலுள்ள நாட்டினர்; மொழி பெயர் தேயத்தவர் (அகம் 213); கல்லா நீள்மொழிக் கதநாய் வடுகர் ஒலிகழை நெல்லி னரிசியொ டோராங்கு ஆனிலைப் பள்ளி யளைபெய் தட்ட வானிண முருக்கிய வாஅல்வெண் சோறு புகரரைத் தேக்கின் அகலிலை மாந்துவர் (அகம் 107); பிழியார் மகிழர் ' அகம் 295; தென்னாடு நோக்கிவந்த மோரியர்க்குத் துணையாக வந்தவர் (அகம் 281). கட்டி என்பானும் எருமையூரனும் இம்மரபினர் (குறு 11, அகம் 253.)

கட்டி

இவன் வடுகர் மரபினன். இவனது நாடு குல்லைக்கண்ணி வடுகர் முனையது (குறு 11). இவன் பாணர்மரபினனொருவனைத் துணையாகக் கொண்டு தித்தன் என்பானுடன் போர்புரிய வந்தனன். தித்தனது அவைக்களத் தெழுந்த கிணையோசை கேட்டு, இவன் அச்சமுற்றுத் தனது வீரருடன் ஓடிவிட்டனன் (அகம் 226). இவன் பெரும்பூண்சென்னியின் படைத்தலைவனாகிய பழையனொடு கழுமலத்தே எதிர்த்துப் பொருதனன் (அகம் 44).

எருமையூரன்

இவன் வடுகர் பெருமகன். இவன் நாட்டது அயிரியாறு. இவன் வெட்சிப் போரில் சிறந்தவன். "நுண்பூண் எருமைக் குடநாட்டன்ன என் ஆய்நலம் தொலையினும் தொலைக" என மாமூலனார் கூறுவதால் (அகம் 115) குடநாடும் இவனுக்குரியதாயிருந்தது என்பது பெறப்படுகிறது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை எதிர்த்து உயிரிழந்த எழுவர்களுள் இவனும் ஒருவன்.

வடவடுகர்

ஊன்பொதி பசுங்குடையார் என்னும் புலவர், இளஞ்சேட் சென்னி வடவடுகர் வாளோட்டினன் எனக்குறிக்கின்றார் (புற 378). "எழூஉத் திணிதோள் சோழர் பெருமகன், புகழ் சிறந்த இளம் பெருஞ் சென்னி, குடிக்கடனாகலிற் குறைவினை முடிமார் செம்புறழ் புரிசைப் பாழிநூறி, வம்பவடுகர் பைந்தலை சவட்டி" என (அகம் 375) இடையன் சேந்தன் கொற்றனார் கூறுகின்றார். இவ் வம்ப வடுகர்கள் 'கோசரே யாகலாம், இவர்களும் வடக்கிருந்து வந்தவராதலின்' எனக் கருதப்படுகின்றார்கள்.

தொண்டையர் மரபினர்

தொண்டையர்க்குரிய நாடு வேங்கடத்தை உள்ளடக்கிய பகுதியாம். "பொருவார் மண்ணெடுத் துண்ணும் அண்ணல் யானை வண்தேர்த் தொண்டையர் வழையம லடுக்கத்து" (குறு 260) எனக் கல்லாடனாரும், "வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர் இனமழை தவழு மேற்றரு நெடுங்கோட்டு ஓங்கு வெள் ளருவி வேங்கடத்தும்பர்" (அகம் 213) எனத் தாயங்கண்ணனாரும் கூறுவது இதனை வலியுறுத்தும். தாயங் கண்ணனாரது வாக்கால் தொண்டையர் நாட்டுக்கு அடுத்தது வடுகர்நாடு (மொழிபெயர் தேயம்) என்பதும் பெறப்படுகிறது. இப் புலவர்கள் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தவராதலால், தொண்டையர் நாடு சிறந்து விளங்கிய காலம் அஃது என்பது துணியப்படும். காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட இளந்திரையன் தொண்டையர்மரபினன் (பெரும்பா 454). அவன் சோழமன்னனுக்கு அடங்கிய சிற்றரசனாவன் (பெரும்பா).

இளந்திரையன்

இவன் தொண்டைமான் இளந்திரையன் எனப்படுவான். காஞ்சி இவனது தலைநகர். இவன் பெரும்பாணாற்றுப்படைத் தலைவன்; நல்லிசைப் புலவர் வரிசையில் சேர்ந்த பெருமை யுடையவன் (நற் 94, 99, 106. புறம் 185). தொண்டைநாட்டு வடவெல்லை வேங்கடம் (அகம் 213). நக்கீரர் பவத்திரி என்னும் ஊருக்குரியவனாகக் குறிக்கும் திரையனும் இவனும் ஒருவரேயோ இருவேறு மன்னரோ என்பது ஆய்வுக்குரியது.

அதிகமான் அஞ்சியின் காலத்தவராகிய ஒளவையார் தொண்டைமானிடத்தில் தூது சென்றார் என்பது ஒளவையாரது செய்யுளால் அறியக்கிடக்கிறது (புறம் 95). இத் தொண்டைமான் இளந்திரையன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் காலத்தவன். இவற்றை நோக்கின், 'இளந்திரையன் தன் தாயினால் தொண்டைக் கொடியால் சுற்றப்பட்டு அனுப்பப் பட்டதால் தொண்டைமானெனப்பட்டான், இவனால் ஆளப் பட்ட நாடு தொண்டை நாடு, இவன் தொண்டையர் முதல்வன்'; எனக் கூறுவது பொருத்தமற்ற செய்தியாகும் என்பது வெள்ளிடை மலையாம். இத்திரையனுக்கு முன்னமே தொண்டையர்மரபு ஆட்சி யுரிமையொடு விளங்கியதென்பது வெள்ளிடைமலை.

நாகர் மரபினர்

இத் தென்னாட்டில் நாகர் மரபினர் பலர் வாழ்ந்து வந்தனர். இம் மரபினருள் சிலர் சங்ககாலத்துச் சிறந்த புலவர்களாக விளங்கினர். முரஞ்சியூர் முடிநாகராயர் என்பார் அப் புலவர்களுள் ஒருவர். பிற்காலத்தவராகிய சூட்டுநாகர், கங்கர், கதம்பர், சாளுக்கியர்களும் நாகர் மரபினர் எனச் சொல்லப் படுகின்றனர். நாகர் மரபினர் இலங்கையையும் ஆண்டிருந்தனர் என்பது சிறுபாணாற்றுப் படை கூறும்செய்தி (சிறுபா, 1.9, 120). இந் நாகர் விஸ்வகர்ம மரபினரே என்பர், இலங்கை வரலாறு கூறும் திரு. இராசநாயகம் என்பார். "உறுபுலித் துப்பின் ஓவியர் பெருமான்" என்னும் சிறுபாணாற்றுப்படைத் தொடருக்குப் பொருள்கூறும் நச்சினார்க்கினியர், ஓவியர் நாகருள் ஒருசாரார் எனக் குறிக்கின்றார்.

நல்லியக்கோடன்

இவன் ஓர் சிற்றரசன்; சிறுபாணாற்றுப்படைத் தலைவன்; ஓவியர் குடியிற் பிறந்தவன். இவன் காலத்து இவனைப் போன்ற வள்ளல் வேறுயாருமில்லை. கடையெழுவள்ளல்களுக்கும் காலத்தால் பிற்பட்டவன் இவன். இவனது தலைநகர் கிடங்கில். மாவிலங்கை, எயில், வேலூர், ஆமூர் என்னும் நகர்களும் இவனுக்குரியன. இவனைப் பாடிய புலவர்கள் இடைகழிநாட்டு நல்லூர் நத்தத்தனாரும்

புறத்திணை நன்னாகனாரு மாவர். இவனது பெயர் 'இவன் இசைப் பயிற்சி மிக்கவன்' என்பதை உணர்த்துகிறது. இவனது மரபைச் சார்ந்தவராக விளங்கியவர் ஓய்மான் நல்லியாதனும் ஓய்மான் வில்லியாதனுமாவர். இவர்களும் புறத்திணை நன்னாகனாரால் பாடப்பட்டவர். இவர்களும் நல்லியக்கோடனும் ஒரு காலத்தவராக இருப்பினும் இருக்கலாம். அல்லது ஒருவர்பின் ஒருவராக ஆட்சி எய்தியவராயினும் ஆகலாம்.

பாணர் மரபினர்

பாணர் என்னும் மரபினர் தென்னாட்டில் வதிந்தனர்; தமிழ் நாட்டுக்கு வடக்கிருந்து வந்தவர் (அகம் 113, 226, 386); தமிழ் நாட்டு மக்களல்லர். இவர் பாடுந் தொழிலையுடைய பாணராவரோ என்பது ஆய்வுக்குரியது. இவர்கள் வாணர் என்றும் குறிக்கப்படுகின்றனர். சிறுகுடி என்னும் ஊர் இவர்க்குரியது (நற் 340, 367 அகம் 204). "வாணன் வைத்த விழுநிதி பெறினும்" என மதுரைக் காஞ்சி குறிப்பதனால் இவர்கள் செல்வம்மிகச் சேர்த்தனர் என்பதும் மலைப்பகுதியில் அதனை ஒளித்துவைத்தனர் என்பதும் புலனாம்.

பண்ணன்

இவன் சிறந்த கொடையாளி. குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் இவனது நண்பன். இவனைப் பாடிய புலவர்கள் கோவூர் கிழாரும், மதுரை அளக்கர்ஞாழர் மகனார் மள்ளனாரும் ஆவர். சோழன் கிள்ளிவளவன் இப்பண்ணனின் வள்ளன்மையைப் புகழ்ந்துள்ளது பாராட்டற்குரியது (புறம் 173). சிறுகுடி என்னும் ஊர் இவனுக்குரியது. இவ்வூர் வாணன் என்பானுக்கும் உரியது எனக் காணப்படுவதனால் (அகம் 204 நற் 340) இப் பண்ணன் வாணன் மரபினன் என்று கருதப்படுகிறான்.

பாணன்

இவன் வடநாட்டினன் (அகம் 152); மிக்க வலியுடையவன்; மற்போர் செய்வதில் கைதேர்ந்தவன். கட்டி என்பான் தித்தன் வெளியனோடு பொருதற்குச் செல்கையில், அவனுக்குத் துணையாகச் சென்றவன் (அகம் 226). கணையனால் நன்குமதிக்கப் பெற்ற ஆரியப் பொருநன் ஒருவனை வென்றான் (அகம் 386).

பிற மன்னர்கள்

அழிசி

இவன் சோழ மரபினன் (நற் 87). இவன் சிறந்த வீரன். இவனுக்கு ஆர்க்காடு உரியது (குறு 258). இவனுக்கு மகன் சேந்தன். பூதப்பாண்டியனுக்கு நண்பனாகிய ஆதனழிசி என்பான் இவனினும் வேறுவன்.

மத்தி

இவன் ஓர் குறுநில மன்னன். இவனது ஊர் கழார். கழார் காவிரிக்கண்ணது. ஆதலின், இவன் சோழ மன்னனுக்கு அடங்கியவனாதல் வேண்டும். இவன் வள்ளன்மையுடையவன். எழினி என்பான் பிடிபடு பூசலின் எய்தாதொழிய இவன் கடுஞ்சின வேந்தன் ஏவலின் எய்தி, நெடுஞ்சேணாட்டில் படையொடு கூடியவனாகிய அவனை வென்று, அவன் பற்களைக் கொணர்ந்து, வெண்மணி வாயில் என்னும் ஊர்க்கதவில் அழுத்தி வைத்தனன்.

புல்லி

இவன் வேங்கடமலையைச் சூழ்ந்த நாட்டிற்குத் தலைவன்; கள்வர் தலைவன்; சிறந்த வண்மையுடையவன்; களிற்று வேட்டையிற் சிறந்தவன்; மழபுலம் வணக்கியவன் (அகம் 61).

காரி

இவன் கடையெழுவள்ளல்களில் ஒருவன்; மலையமான் திருமுடிக் காரி என வழங்கப்பட்டவன். பெண்ணையாற்றை யடுத்த மலாடு என்று வழங்கும் மலைநாட்டின் தலைவன். கோவலூர் இவனது தலைநகர். இவன் தமிழ் நாட்டு மூவேந்தர்களுக்கும் உதவி புரிந்தவன்; புலவரைப் புரந்தவன்; இரவலர்க்கு இல்லை என்னாது வழங்கியவன்; அந்தணர்க்கு நிலம் தந்தவன்; முள்ளூரில் ஆரியரோடு எதிர்த்துப் பொருதவன். முள்ளூர்மலை இவனுக்குரியது. இவன் கடையெழுவள்ளல்களில் ஒருவனாகிய ஓரி என்பானைக் கொன்று, அவனுக்குரியதாகிய கொல்லிமலையைக் கைப்பற்றி தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறைக்குத் தந்தனன்.

இவனுக்கு மக்கள் இருவர். இவர்களுக்குக் குலப்பகைவனாகிய சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன், அம்மக்களை யானைக் கிடத் தொடங்கிய பொழுது, கோவூர் கிழார் தடுத்ததால் அம்மக்கள் இருவரும் உய்ந்தனர்.

ஓரி

இவன் கடையெழுவள்ளல்களில் ஒருவன்; கொல்லிமலைத் தலைவன். விற்போர்ப் பயிற்சியிற் சிறந்தவன். ஆதலின் இவன் வல்வில் ஓரி எனவும் குறிக்கப்படுகின்றான் (புறம் 152). மலையமான் திருமுடிக்காரி இவனைக்கொன்று, இவனுக்குரிய கொல்லி நாட்டினைப் பெருஞ்சேர லிரும்பொறைக்குக் கொடுத்தனன்.

அதிகமான் நெடுமான் அஞ்சி

இவன் சிறந்த வள்ளல்; மழவர் தலைவன்; போர் வேட்கை மிக்கவன்; வெட்சிப் பூவையும் வேங்கைப் பூவையும் அணிவோன்; பனைமாலை யுடையவன்; எழுமுடியாரம் அணிந்தோன். ஆதலின், சேரர் மரபினன் போலும். மலையமான் திருமுடிக் காரியோடு எதிர்த்துநின்று கோவலூரை வென்றனன் இவன்; எனினும் கோவலூரைத் தன் கைப்படுத்தியதாகத் தெரியவில்லை. குதிரைமலை இவனுக்குரியது. இவனது ஊர் தகடூர். இவன் மகன் பொகுட்டெழினி.

இவன், உண்டாரை வாழ்விக்க வல்லதொரு கருநெல்லிப் பழத்தைப் பெற்று, அதனை ஒளவையாருக் களித்துப் புகழ்பெற்றான்; ஒளவையாரைத் தொண்டைமான் என்னும் அரசனிடம் தூதுவிடுத்தான். இவனுடைய முன்னோர்கள் விண்ணுலகிலிருந்து கரும்பை இம் மண்ணுலகிற்குக் கொணர்ந்தனர்.

நாஞ்சில் வள்ளுவன்

இவன் நாஞ்சில் நாட்டினன்; பரிசிலர்க்கு வேண்டியவற்றைக் கொடுப்பவன். நட்பெதிர்ந்தோர்க்கு அண்மையன்; துப்பெதிர்ந்தோர்க்கு உள்ளாச் சேய்மையன்; கிளி மரீஇய வியன்புனத்து மரனணி பெருங்குரலனையன்; ஒளியிருங்கதுப்பின் ஆயிழைகணவன். இவனது இயற்பெயர் கந்தன். நாஞ்சின்மலை வளம்பல நிறைந்தது.

இவனைப் பாடிய புலவர்கள் ஔவையார், ஒருசிறைப் பெரியனார், மருதனிளநாகனார், கருவூர்க்கதப்பிள்ளை ஆவர். பாண்டியன் உக்கிரப்பெருவழுதி இவன் காலத்தவன். ஆதலின் திருக்குறள் எழுதிய திருவள்ளுவர் இவனே யாகலாம். இவன் தென்னவன் வயமறவன் என ஔவையார் கூறுகின்றார்.

நாலை கிழவன் நாகன்

இவன் பாண்டியன் வயமறவன்; மிக்க கொடை யுடையன்; படை வேண்டுழி வாள் உதவியும், வினை வேண்டுழி அறிவுதவியும் பாண்டியனுக்கு அமைச்சியல் பூண்டவன்; தோலா நல்லிசை யுடையவன். இவனைப் பாடிய புலவர் வடமநெடுந்தத்தனார்.

நள்ளி

இவன் கடைஎழுவள்ளல்களில் ஒருவன்; கண்டீரக் கோப்பெருநள்ளி எனவும் குறிக்கப் படுகின்றான். மலையும் காடும் சூழ்ந்தது இவனது நாடு. தோட்டி என்னும் மலை இவன் நாட்டது. இவனது நாட்டில் ஆனெய் சிறந்ததெனக் காக்கைபாடினியார் குறிக்கின்றார் (குறு 210); மலர்களுள் சிறந்தது காந்தள். இவன் இழையணி நெடுந்தேர் களிறொடு மென்றும் மழைசுரந்தன்ன ஈகையன். இவனைப் பாடிய வன்பரணர் ஓர் நாள் காட்டில் தன் சுற்றத்தாரோடு உணவின்றி வழிநடந்த களைப்பால் ஓரிடத்துத் தங்கியிருந்தபோது, நள்ளி இப்புலவரை நோக்கி, இரங்கி, தான் வேட்டையிற் பெற்ற இறைச்சியைப் பக்குவப்படுத்தி உண்ண அளித்தனன். பிறகு, 'பெறுதற்கரிய வீறுசால் நன்கலம் பிறிதொன்றில்லை, காட்டு நாட்டேம்' எனக் கூறித் தான் மார்பிற்பூண்ட வயங்கு காழாரம் மழை செறி முன்கைக் கடகமொடு ஈந்தனன்; தன் நாடும் சொல்லான் பேரும் சொல்லானாகி ஏகினன். இவனன்றோ வண்மையன்! இவனைப் பாடிய வன்பரணர் ஓரியையும், காக்கை பாடினியார் ஆடு கோட்பாட்டுச் சேரலாதனையும், புகழ்ந்து பாடியிருப்பதனால் இவன் அவர்கள் காலத்தவனாவன்.

பிட்டன்

இவன் குதிரைமலைத் தலைவன்; குட்டுவனது படைமுதலி. கோதையின் காலத்தும் படை முதலியாக விளங்கினன். சிறந்த

கொடையாளி; போரில் வல்லவன்; நகைவர்க்கு மென்மையன்; பகைவர்க்கு இரும்பு பயன்படுக்கும் கருங்கைக் கொல்லன். இவனைப் பாடிய புலவர்கள் உறையூர் மருத்துவன் தாமோதரனார், வடம வண்ணக்கன் தாமோதரனார் முதலியோர்.

இவன் மகன் கொற்றன். அவன் பிட்டங்கொற்றன் எனக் குறிக்கப்படுகிறான். அவனும் சிறந்த போர் வீரன்; இளங்கோசரை வென்றவன்; வருவார்க்கு வரையாது வழங்குபவன். அவனைப் பாடிய புலவர்கள் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார் ஆவர். அவன் வேங்கை மாலையணிபவன்.

வெளிமான்

இவன் ஓர் குறுநிலமன்னன்; கொடையாளி. இவனைப்பாடிய புலவர் பெருஞ்சித்திரனார். இவனுக்குத் தம்பி இளவெளிமான். அவன் யார்க்கும் ஒன்றும் ஈயாதவன், புலவரிடத்து அன்பில்லாதவன். வெளிமான் இறந்தபின்பு, பெருஞ்சித்திரனார் இளவெளிமானிடம் சென்று பரிசில் கேட்ப, சிறிது கொடுப்ப அவரால் அவமதித்துப் பாடப்பெற்றான்.

குமணன்

இவன் ஓர் வள்ளல்; முதிர மென்னும் மலைக்குத் தலைவன். இவன் தம்பி இளங்குமணன். அவன் இவனது நாட்டைக் கைப்பற்றிக்கொண்டு இவனைக் காட்டிற்குத் துரத்திவிட்டான்; அவ்வளவில் நில்லாது இவனைக் கொல்லவும் துணிந்தான். குமணனது தலையைக் கொணர்வார்க்குப் பரிசளிப்பதாக அறிவித்தான். புலவர் பெருஞ்சாத்தனார் காட்டிற்குச்சென்று குமணனைக்கண்டு பொருள் வேண்டி இரப்ப, குமணன் தனது தலை கொடுப்பதற்கு வாளைக் கொடுத்தான். அதனைப் பெற மனமில்லாத புலவர் உண்மையுணர்ந்து இவ்விருவர்க்கும் உள்ள பகைமை ஒழியும்படி செய்தார். இவனைப் பாடிய புலவர்கள் பெருந்தலைச்சாத்தனார், பெருஞ்சித்திரனார் ஆவர்.

முற்றும்.

கிடைக்காத சில தமிழ் நூல்கள்

திரு. T. V. S. திருஞானசம்பந்தம்அவர்கள், M. A. சரித்திர விரிவுரையாளர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

அண்மையில் தமிழ் நாட்டிலுள்ள சில புத்தகசாலைகள் பல புதிய நூல்களை ஏட்டுப் பிரதிகளிலிருந்து வெளியிட்டிருக்கின்றன. தமிழகத்தின் வரலாற்றினை அறிவதற்குக் கல்வெட்டுக்கள் பேருதவிபுரிவது எல்லோரும் அறிந்ததேயாகும். அக் கல்வெட்டுக்களுள் சில, தமிழகத்தில் முற்காலத்தில் வழங்கிய தமிழ் நூல்கள் சிலவற்றைக் குறிப்பிடுகின்றன. தமிழ்நாட்டில் ஆங்காங்கே உள்ள ஏட்டுப்பிரதிகளை ஆராய்ந்து வெளியிடும் முயற்சி மிகுந்துள்ள இக்காலத்தில் மேற்குறித்த கிடைக்காத நூல்களும் எங்கேனும் கிடைக்கலாம். ஆதலால் அவற்றைப்பற்றிய சில குறிப்புக்கள் இங்கே தரப்படுகின்றன.

1. ஸ்ரீ இராசராச விசயம்

இந் நூல்[1] பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோழர் பேரரசை நிறுவிப் பெரும்புகழ் பெற்றவனும் தஞ்சைப் பெரிய கோயிலை யமைத்தமையால் இறவாநிலை யெய்திச் சிறப்புற்றவனுமாகிய முதல் இராசராச சோழன் வரலாற்றைக் கூறுவதாகும். இதன் ஆசிரியர் சவர்ணன் நாராயணன் பட்டாதித்தன் என்பவராவர்.

2. இராசராசேசுவர நாடகம்

தஞ்சைப் பெருவுடையார்கோயில் கல்வெட்டொன்றால்[2] அறியப்படும் இந்நூல், அக்கோயிலில் விழாக்காலங்களில் நடிக்கப்பட்டதொரு தமிழ் நாடகமாகும். இது தஞ்சையில் முதல் இராசராசசோழன் 'இராசராசேச்சுரம்' என்னும் கோயில் எடுப்பித்த வரலாற்றைக் கூறுவதா யிருந்திருத்தல் வேண்டும். அப் பெருவேந்தனின் பெயரனும் கங்கைகொண்ட சோழனின் மூன்றாவது புதல்வனுமாகிய பரகேசரி இரண்டாம் இராசேந்திர சோழன் கி. பி. (1051-1063) இந்நாடகத்தைத் தஞ்சைப் பெரியகோயிலில் ஆண்டுதோறும்

---

[1] M. E. R. 1930—31, part II, para 12.

[2] South Indian Inscriptions, Vol. II, No. 67.

விழாக் காலங்களில் நடித்தற்கு நூற்றிருபதுகல நெல் நிவந்தமாக அளித்துள்ளனன்.

மேற்குறித்த இரு நூல்களும் இப்போது கிடைப்பின், பொதுவாகச் சோழர்குடியைப் பற்றியும் சிறப்பாக முதல் இராசராசனைப் பற்றியும் பல அரிய உண்மைகளையும் நாம் அறிந்துகொள்ளலாம்.

3. குலோத்துங்கசோழ சரிதை

இந்நூல் கி. பி. 1097-ல் இயற்றப் பெற்றது. இது பதினொன்றும் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் சோழ இராச்சியத்தில் பேரரசனாக விருந்து ஆட்சிபுரிந்த இராசகேசரி முதற் குலோத்துங்க சோழன் வரலாற்றைக் கூறுவதாம். கவிகுமுதசந்திர பண்டிதராகிய திருநாராயணப் பட்டர் என்பவரே இந்நூலின் ஆசிரியராவர். கவிகுமுதசந்திர பண்டிதர் என்பது இவருடைய சிறப்புப் பெயராகும். இவ்வாசிரியர் இந்நூலியற்றியமைக்குப் பரிசிலாகப் புதுச்சேரியைச் சார்ந்த திரிபுவனி என்னும் ஊரில் இறையிலி நிலம் பெற்றதை அவ் ஊரிலுள்ள கல்வெட்டொன்று[1] புலப்படுத்துகின்றது. தனது வரலாறு கூறும் இந்நூலைக் கேட்டுச் சிறப்பிக்குமாறு குலோத்துங்க சோழன் விரும்பிய தற்கிணங்கத் திரிபுவனிமாதேவிச் சதுர்வேதிமங்கலத்துச் சபையார் வீரநாராயண விண்ணகர் ஆழ்வார் கோயிலில் கூடியிருந்து இந்நூலைப் படிக்கக் கேட்டு மகிழ்ந்து, பரிசிலாக அரைநிலமும் இரண்டு மாவும் இறையிலியாக அளித்தனர் முதற் குலோத்துங்கன் வாழ்நாளில் எழுதப்பெற்ற இவ் வரலாற்று நூல் தற்காலத்தில் கிடைப்பின் அவ் வேந்தனுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் பலவற்றை அறியலாம்.

4, 5. கன்னிவன புராணம், புலியூர் நாடகம்[2]

இவற்றை இயற்றியவர் முற்குறித்த முதற்குலோத்துங்க சோழன் ஆட்சியின் இறுதியில் நிலவிய, வீரைப் பரசமய கோளரி மாமுனி என்னும் பெரியாராவர். வீரை என்னும் ஊரைச் சார்ந்தவர்; பரசமய கோளரி என்ற சிறப்புப் பெயரோடு விளங்கியவர். இவருடைய இரு நூல்களும் திருப்பாதிரிப்புலியூரின் சிறப்பினைக் கூறுவன வாகும்.

---

[1] Ins. 198 of 1919. [2] S. I. I. VII Nos. 752 & 753.

6. ஒட்டக்கூத்தரால் பாடப்பெற்ற கலிங்கப் பரணி

புலவர் பெருமானாகிய ஒட்டக்கூத்தர் விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்க சோழன், இரண்டாம் இராசராச சோழன் ஆகிய மூவர் காலத்தும் சிறப்புற்று விளங்கியமை யாவரும் அறிந்ததே. அவர் தம்மைப் பலவகையாலும் சிறப்பித்துவந்த இப் பேரரசர்கள் மீது உலா, பிள்ளைத்தமிழ் ஆகிய நூல்களை இயற்றிப் புகழ்ந்துள்ளனர். அவற்றோடு அமையாது, விக்கிரம சோழன் இளமைப் பருவத்தில் தென்கலிங்க வேந்தனாகிய தெலுங்க வீமனைப் போரில் வென்ற அரிய நிகழ்ச்சியைப் பாராட்டிப் பரணி ஒன்றும் பாடியுள்ளனர் என்பது, அவரது தக்கயாகப் பரணியாலும் அதன் உரைக் குறிப்பினாலும் வெளியாகின்றது. இவ்வாறு விக்கிரம சோழன் கலிங்கம் வென்று பரணி கொண்டதை அவ்வறிஞரே குலோத்துங்கசோழனுலா, இராசராசசோழனுலா, குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் ஆகிய நூல்களிலும் பாராட்டிக் கூறியுள்ளனர்.[1]

7. அரும்பைத் தொள்ளாயிரம்

இந்நூல், முதற்குலோத்துங்கசோழன் படைத் தலைவனாகிய அரும்பாக்கிழான் மணவிற்கூத்தனான காலிங்கராயன் என்னும் தலைவன்மேற் பாடப்பட்டதாகும். இவன் சைவசமயத்திற்கு ஆற்றியுள்ள தொண்டுகள் பலவாகும்.[2] இவனுடைய சமயத்தொண்டுகளை விளக்கும் முப்பத்தாறு வெண்பாக்கள்[3] தில்லைப்பதியிலும், இருபத்தைந்து வெண்பாக்கள்[4] திருவதிகை வீரட்டானத்திலும் உள்ள திருக்கோயில்களில் வரையப்பட்டுள்ளன. இவ் வெண்பாக்கள் முற்கூறிய அரும்பைத் தொள்ளாயிரம் என்னும் நூலின் பகுதிகளாக இருத்தல் கூடும். இந்நூலின் ஆசிரியர் ஒட்டக்கூத்தரே என்றும் கூறலாம்.

---

[1] பிற்காலச் சோழர் சரித்திரம், இரண்டாம் பகுதி, பக்கங்கள் 79-80.

[2] ஷை ஷை பக்கம் 61.

[3] S. I. I. IV No. 225; பெருந்தொகை, பாடல்கள் 1059—1094.

[4] Ins 369 of 1921; பெருந்தொகை, பாடல்கள் 1095—1119.

8. தமிழ்ப்பாரதம்

பன்னிரண்டாம்நூற்றூண்டின் இறுதியிலும், பதின்மூன்றும்நூற்றூண்டின் முற்பகுதியிலும் சோழஇராச்சியத்தில் ஆட்சிபுரிந்தபெருவீரனுகிய மூன்றுங் குலோத்துங்கசோழன் காலத்தில் தமிழில் இப்பாரதம் மொழிபெயர்க்கப்பட்டது. இவ் வருஞ்செயலைச் செய்தவர், தொண்டைமண்டலத்துக் குன்றவர்த்தனக் கோட்டத்து இல்லத்தூர் நாட்டு அரும்பாக்கம் உடையான், அருணிலை விசாகன், திரைலோக்ய மல்லன், வத்சராசன் என்பவர். வட திருவாலங்காட்டிலுள்ள மூன்றுங் குலோத்துங்கனது முப்பத்திரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று[1] இப் புலவரைப் "பாரதந்தன்னை அருந்தமிழ்ப்படுத்திச் சிவநெறி கண்டவர்" என்று கூறிப் பாராட்டுகின்றது. இவ் வாசிரியருடைய சிறப்புப் பெயர்கள், இவர் சோழர் பேரரசில் சிறப்புற்று விளங்கிய ஓர் அரசியல் தலைவராவர் என்பதைப் புலப்படுத்துகின்றன.

9. காங்கேயன் பிள்ளைத்தமிழ்

இது, முதல்மாறவர்மன் சுந்தரபாண்டியனது (கி. பி. 1216—1238) அரசியல் தலைவர்களுள் ஒருவனுகிய கண்டன் உதயஞ்செய்தான் காங்கேயன் என்னும் தலைவன்மீது பாடப்பெற்றதாகும்[2]. இதன் ஆசிரியர், சிறுபெருச்சியூர்க் கொடிக்கொண்டான் பெரியான் ஆதிச்ச தேவன் என்பவராவர். பிள்ளைத்தமிழ் பாடியமைக்குப் பரிசிலாக இப் புலவர் சாத்தனேரி என்னும் ஊரில் இறையிலிநிலம் அளிக்கப்பெற்றூர்.

10. ஓங்குகோயில் புராணம்

இராமநாதபுரம் ஜில்லா திருப்புத்தூரில் திருத்தளியாண்டநாயனூர் கோயிலில் எழுந்தருளியுள்ள, ஓங்குகோயில் உறைவார் என்னும் கடவுள் புரிந்தருளிய திருவிளையாடல்களை விளக்கிக் கூறும் புராணமே இந் நூலாகும். இதன் ஆசிரியர் திருப்புத்தூரிலிருந்த சிறுமடம் என்னும் மடத்தில் வதிந்த, திருவம்பலம் உடையார் மறைஞானசம்பந்தர் என்னும் பெரியாராவர். புராணம் பாடி அரங்கேற்றியபோது இவருக்கு மேல்திருமங்கலம் என்ற மண்ணி

---

[1] Ins. 482 of 1905, [2] Ins. 26 of 1926.

மங்கலத்தில் ஐந்துமா நிலம் அளிக்கப்பெற்றது. திருப்புத்தூர்க் கோயிலில் வரையப்பெற்றுள்ள கல்வெட்டொன்று[1] இச் செய்திகளைத் தெரிவிக்கின்றது. இப் புலவர் பதினேந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவர்.

11. திருப்பாலைப்பந்தல் உலா

திருப்பாலைப்பந்தல் என்பது தென்னார்க்காடு ஜில்லா திருக்கோவலூர்த் தாலூகாவிலுள்ள ஓர் ஊராகும். அவ்வூரில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள சிவபிரான் மீது எல்லப்பநயினார் என்னும் தமிழ்ப்புலவர் இவ்வுலாவைப் பாடியுள்ளமை அவ்வூர்க் கோயிலிலுள்ள கல்வெட்டொன்றால்[2] வெளியாகின்றது. இவ்வுலாப் பாடிய ஆசிரியர்க்குக் கோயிலதிகாரிகள் செய்த சிறப்புக்களையும் அக்கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. இப்புலவர் திருவண்ணாமலைக்கு மேற்கே உள்ள தாழையூரில் பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

12. இறைசைப் புராணம்

தென்னார்க்காடு ஜில்லா திருக்கோவலூர்த் தாலூகாவில் எலவானாசூர் என்று வழங்கும் ஊரே முற்காலத்தில் இறைசை என வழங்கியது. இவ்வூரில் எழுந்தருளியுள்ள கடவுள் திருவிளையாடல்களைக் கூறும் நூலே இப் புராணமாகும். இதை இயற்றியவர் திருமலைநயினார் சந்திரசேகரர் என்னும் புலவராவர். புராணம் பாடிய இக் கவிஞருக்குக் கோயிலதிகாரிகள் செய்த சிறப்புக்களை எலவானாசூர்க் கோயிலில் உள்ள கல்வெட்டொன்று[3] கூறுகின்றது. இப் புலவரும பதினாறும் நூற்றாண்டில் வாழ்ந்தவரே யாவர்.

13. திருவதிகைக் கலம்பகம்

இது திருவதிகையில் எழுந்தருளியுள்ள "வீரட்டானமுடைய தம்பிரானார்" மீது தொண்டைமண்டலத்துக் காசியூர்க்கோட்டத்துத் தனியூரான உத்தரமேரூரைச் சார்ந்த மகிபாலகுலகாலச்சேரி என்னும ஊரினரான உத்தண்ட வேலாயுதபாரதி என்பவரால் இயற்றப்பெற்றது. இதைக் கூறும் திருவதிகைக் கல்வெட்டு அவ் வாசிரியர் வீரவல்வி தேவராச பட்டர் காசிநாதர் குப்பையன் என்னும்

[1] Ins, 180 of 1936. [2] Ins. 401 of 1938. [3] Ins. 435 of 1938.

பெயர்களை உடையார் என்றும் கூறுகிறது. இக் கவிஞர் சகம், 1458ல் (கி. பி. 1536) நன்செய் நிலம் இரண்டுமாவும் புன்செய் நிலம் ஒருமாவும் கோட்டைக்குள் அகரத்தில் குடியிருப்பு மனை யொன்றும் பரிசிலாகப் பெற்றார் எனவும் அக்கல்வெட்டு[1] அறிவிக் கின்றது.

14. திருவல்லையந்தாதி

வடஆர்க்காடு ஜில்லா திருவல்லத்தில் எழுந்தருளியுள்ள சிவ பெருமான் மீது குறட்டி என்னும் ஊரினரான வரதையன் என் னும் புலவர் இந்நூலைப் பாடியுள்ளனர். அதைப் பாராட்டு முகத் தான் வல்லத்துக் கோயிலதிகாரிகள் இப்புலவருக்கு நூறுகுழி நிலம் வழங்கியுள்ளமை அக்கோயில் கல்வெட்டொன்றால்[2] புல னாகின்றது.

15. குமாரசுவாமி உலா

இவ் வுலா வடஆர்க்காடு ஜில்லா போளூர்த் தாலுகாவைச் சேர்ந்த காப்பலூரில் எழுந்தருளியுள்ள முருகக்கடவுள் மீது திருக் காமி அவதானியார் என்னும் புலவரால் பதினெட்டாம் நூற்றாண் டில் பாடப்பெற்றதாகும். காப்பலூரில் உள்ள திருக்கோயிலில் துர்முகியாண்டு ஆனித் திங்கள் 25-ம் நாளில் வரையப்பெற்ற ஒரு கல்வெட்டு[3] இச் செய்தியைக் கூறுவதோடு, சொக்கப்பிள்ளை அய் யன் என்பாரும் கோயில் அதிகாரிகளும் இந்நூலாசிரியருக்கு உலாப் பாடியமைக்காகவும் கோயிலில் திருவிழாக்கள் நடத்துவ தற்காகவும் நூறுகுழி நிலம் வழங்கியமையையும் உணர்த்துகின் றது. இங்கே குறிக்கப்பெற்ற குமாரசுவாமி உலாவும் இக்காலத்தில் கிடைக்கவில்லை.

---

[1] Ins. 376 of 1921; சாசனத் தமிழ்க்கவி சரிதம், பக்கம் 154.
[2] Ins. 233 of 1921; சாசனத் தமிழ்க்கவி சரிதம், பக்கம் 200.
[3] Ins. 261 of 1938 39, M. E. R. 1938-39, partII Para 73.

வளருந் தமிழ்

வித்துவான் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள், M. A. கொழும்பு.

(126-ம் பக்கத் தொடர்ச்சி)

பதினாறாம் நூற்றாண்டு-பிற்பகுதி

சிவதருமோத்தரம், பதி பசு பாசப் பனுவல், கமலாலய புராணம், சங்கற்ப நிராகரணம், சைவசமய நெறி, அருணகிரிப் புராணம் முதலிய பல நூல்களைச் செய்த மறைஞான சம்பந்தரும்,[1] சௌந்தரிய லகரி,[2] வராகிமாலை, ஆனந்தமாலை முதலியவற்றை இயற்றிய வீரைக் கவிராச பண்டிதரும், இவருடைய மகனும் நெல்லை வருக்கக்கோவையின் ஆசிரியருமாகிய வீரை அம்பிகாபதியும் இந் நூற்றாண்டின் பிற்பகுதியின் தொடக்கத்திலே தமிழ்ப்பணி புரிந்தனர். சிவாக்கிரயோகிகள் சிவஞானசித்தியாருக்கு ஒரு விருத்தியுரையினையும், சிவநெறிப் பிரகாசம், சைவபரிபாடை முதலிய பல நூல்களையும், கிரியாதீபிகை முதலிய பல வடமொழி நூல்களையும் இக் காலப் பகுதியில் இயற்றினர். இக்காலப் பகுதியிலே தமிழுக்கும் சைவத்துக்கும் பெருந்தொண்டாற்றியவர்களுள் சிறந்தவர் கமலை[3] ஞானப்பிரகாசர் ஆவார். இவருடைய பெருமையை ஞானப்பிரகாச சுவாமிகள் மான்மியம் நன்கு விளக்குகிறது. புட்பவிதி, பூ மாலை, சிவபூசை அகவல், பிராசாத மாலை, சிவானந்த போதம், அனுட்டான அகவல், திருவாரூர்ப் பள்ளு, அத்துவித வாதக் கட்டளை, திருமழுவாடிப் புராணம், திருவானைக்காப் புராணம்[4]

---

[1] இவரை மறைஞான சம்பந்த தேசிகர் எனவும் மறைஞான சம்பந்த ஞானியார் எனவும் வழங்குவர்.

[2] இதன் முதனூல் வடமொழியில் ஆதி சங்கரர் இயற்றிய சௌந்தரிய லகரியாகும்.

[3] கமலை என்பது திருவாரூரைக் குறிக்கும்.

[4] இஃது இப்பொழுது அருகி வழங்குகிறது. கச்சியப்ப முனிவர் இயற்றிய திருவானைக்காப் புராணமே வழக்கிலுள்ளது.

முதலியன யாவும் இவர் செய்தனவே. இவருடைய சீடர் பலராவர். அவர்களுள் தருமபுர மடத்தின் தலைவரான குருஞானசம்பந்தர் ஒருவர்; இவர் பண்டாரக் கலித்துறை, சொக்கநாதக் கலித்துறை, சொக்கநாத வெண்பா, நவரத்ன மாலை, முத்தி நிச்சயம், சிவயோக சாரம், போானந்த சித்தியார் முதலிய பல நூல்களை இயற்றினர். திருவுத்தரகோசமங்கைப் புராணத்தைப் பாடிய மாசிலாமணிச் சம்பந்தர் மற்றொருவர்; திருவொற்றியூர்ப் புராணம் பாடிய திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் இன்னொருவர். சேது புராணம், திருப்பரங்கிரிப் புராணம் என்பவற்றைப் பாடியவரும், சிவஞான சித்தியாருக்குச் சிறந்த ஒருரையினைச் செய்தவருமாகிய நிரம்பவழகிய தேசிகரும் கமலை ஞானப்பிரகாசருடைய சீடரே. செப்பேசப் புராணத்தைச் செய்த ஞானக் கூத்தரும் திருவாரூர்ப் புராணத்தைப் பாடிய அளகை சம்பந்தமுனிவரும் நிரம்ப அழகிய தேசிகருடைய மாணாக்கர்களாவர். சுந்தரபாண்டியம்[5] எனும் நூலை இயற்றிய அந்தாரியும் இக்காலத்தவரே.

"நைடதம் புலவர்க் கௌடதம்" எனும் புகழ் பெற்ற நைடதத்தை இயற்றித் தமிழ் விருந்தளித்த அதிவீராமபாண்டியர் இக்காலப் பகுதியிலேயே தென்பாண்டி நாட்டை ஆண்டார். காசிகாண்டம்,[6] கூர்ம புராணம்,[7] இலிங்க புராணம், வெற்றிவேற்கை எனும் நூல்களையும் இயற்றினர். இவர் பின் ஆண்ட வரதுங்கராம பாண்டியர், பிரமோத்தர காண்டம், திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருக்கருவை வெண்பாவந்தாதி, திருக்கருவைக் கலித்துறை யந்தாதி என்பனவற்றைப் பாடினர். இவனுக்குப் பின்னாண்ட ஓர் அரசனோடு பாண்டிய வம்சம் இந்நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் அழிந்துவிட்டது. திருக்காளத்தி

---

[5] சுந்தரபாண்டியம் எனும் வடநூலின் மொழிபெயர்ப்பு. மதுரையிலே சிவபெருமான் செய்த திருவிளையாடல்களைக் கூறுவது.

[6] ஸ்காந்த புராணத்துச் சங்கர சங்கிதையில் ஒரு காண்டம்.

[7] வடமொழியிலுள்ள பதினெண் புராணங்களுள் ஒன்று.

நாதருலா, சேயூர் முருகனுலா, இரத்தினகிரி நாதருலா,[8] திருவண்ணா மலையார் வண்ணம், திருக்காளத்திநாதர் கட்டளைக்கலித்துறை முதலிய நூல்களைப்பாடிய சேறைக் கவிராயபிள்ளையும், திருவாரூர்க் கோவை, அருணையந்தாதி, அருணாசலப் புராணம், திருவிரிஞ்சைப் புராணம் முதலியவற்றை இயற்றிய எல்லப்ப நயினாரும் இக் காலத்திலே திகழ்ந் தனர். இன்னும் இந்நூற்றாண்டின் இறுதியிலே சம்பந்த முனிவர் திரு வாரூர்ப் புராணத்தையும், ஞானக்கூத்தர்[9] திருவையாற்றுப் புராணத் தையும், இரேவணசித்தர் அகராதி நிகண்டு, திருப்பட்டீச்சுரப் புராணம் முதலியவற்றையும் இயற்றினர்.

திரு அண்ணாமலையில் வாழ்ந்த குகை ஞானப்பிரகாசர் அருணகிரி அந்தாதியினையும், இவருடைய சீடருள் ஒருவரான குரு நமச்சிவாயர் சுந்தர வெண்பா, அண்ணாமலை வெண்பா முதலியவற்றையும் இன்னொரு சீடரான ஆறுமுகசுவாமிகள் நிட்டானுபூதி எனும் நூலையும் செய்தனர். யாழ்ப்பாணத்திலிருந்து சோழநாடு புக்க ஞானப்பிரகாச சுவாமி சிவ ஞான சித்தியாருக்குச் சிறந்த ஓர் உரையினையும், வடமொழியிலே சித் தாந்த சிகாமணி, பவுட்காரகம விருத்தி முதலிய பல நூல்களையுஞ் செய்து புகழ் பெற்றவர்.

பதினேழாம் நூற்றாண்டு-முற்பகுதி

இந்த நூற்றாண்டிலே நாயக்க மன்னர்கள் மதுரையை ஆண்டனர். திருவாவடுதுறை, தருமபுரம் முதலிய மடங்கள் தமிழையும் சைவத் தையும் மிகச் சிறப்பாக வளர்த்து வந்தன. இம் மடங்களின் தலைவர் களிலும், இவற்றிலே சேர்ந்து கல்வி கற்றவர்களிலும் பலர் இந் நூற் றாண்டிலே பெரும் புலவர்களாகத் திகழ்ந்தனர். பல புராணங்களும் பண்டார சாத்திரங்களும் தோன்றின. திருவாவடுதுறை மடத்தலைவ

---

[8] வாட்போக்கி நாதருலா எனவும் படும்,

[9] இப் பெயருடைய புலவர் வேறொருவருமுளர்.

ராகிய நமச்சிவாய மூர்த்தியிடம் தீட்சை பெற்ற சித்தர் சிவப்பிரகாசர்[10] அத்துவித வெண்பா, சதகத் திரயம், அனுபவ சட்ஸ்தலம் முதலிய நூல்களை இந் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இயற்றினர். நமச்சிவாய மூர்த்திகளின் பின் மடாதிபதியாய்ப் பட்டத்திலமர்ந்த அம்பலவாண தேசிகர்[11] இயற்றிய நூல்கள் தசகாரியம், சன்மார்க்க சித்தியார் சிவாச்சிரமத் தெளிவு, சித்தாந்த சிகாமணி சித்தாந்தப் பஃறொடை, உபாய நிட்டை வெண்பா, நிட்டை விளக்கம், உபதேச வெண்பா, நமச்சிவாய மாலை, அதிசய மாலை என்பனவாகும். இவர் காலத்திலேயே சின்னப்பட்டத்திலிருந்த தெக்கணாமூர்த்தி தேசிகர் தசகாரியம்[12] உபதேசப் பஃறொடை[13] எனுமிரு நூல்களை அருளிச் செய்தார். சித்தர் சிவப்பிரகாசரின் சீடரான ஞானக்கூத்தர் என்பார் விருத்தாசல புராணத்தையும், களந்தைக் குமரன் என்பார் திருவாஞ்சிய புராணத்தையும் பாடினார்கள். கும்பகோணப் புராணம், வேதாரணியப் புராணம், திருக்கானப்பேர்ப் புராணம் முதலியவற்றை இயற்றினர் அகோரமுனிவர். திருப்பூவணம் கந்தசாமிப் புலவர் பாடிய நூல்கள், திருப்பூவணப் புராணம், திருவாப்பனூர்ப் புராணம், திருப்பூவணநாதருலா முதலியனவாகும். பால சுப்பிரமணிய கவிராயர் பாடியவற்றுள் பழனித் தல புராணம், வேதாந்த சித்தாந்த சமரச தீபம் முதலியன குறிப்பிடத் தக்கன.

---

10 தமிழ் நாட்டிலே சிவப்பிரகாசர் எனும் பெயருடைய புலவர்கள் பலருளர்.

11 சைவாதீனங்களின் தலைவர்கள் பண்டார சந்நிதிகள் எனவும் தேசிகர் எனவும் படுவர். துறவுபூண்ட சீடர்கள் தம்பிரான் எனப்படுவர்.

12 தசகாரியம் எனும் பெயருடைய நூல்கள் பல, பலராலே இயற்றப்பட்டுள்ளன.

13 பண்டார சந்நிதிகள் இயற்றிய இப் பன்னிரு நூல்களுடன், ஈசான தேசிகர் இயற்றிய தசகாரியத்தையும், பேரூர் வேலப்ப தேசிகர் செய்த பஞ்சாங்கப் பஃறொடையையும் சேர்த்துப் பண்டார சாத்திரங்கள் பதினான்கு என்பர்.

இந் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த புலவர்களுள் மிகச் சிறந்தவர் குமரகுருபரரவர். தென்னாட்டிலன்றி வடநாட்டிலும் தமிழையும், சைவத்தையும் வளர்த்துப் புகழ்பெற்றவர். கந்தர்கலிவெண்பா கயிலைக் கலம்பகம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை, மீனாட்சியம்மை குறம், மதுரைக் கலம்பகம், நீதி நெறி விளக்கம், திருவாரூர் நான்மணிமாலை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், சிதம்பர மும்மணிக்கோவை, சிவகாமியம்மை இரட்டை மணிமாலை, பண்டார மும்மணிக்கோவை, காசிக் கலம்பகம், சகலகலா வல்லிமாலை முதலியன இவர் பாடிய நூல்களாகும். இவரிடம் கல்வி கற்ற வெள்ளியம்பலவாணத் தம்பிரான் [14] ஞானசம்பந்ததேசிகர் மீது சமுகமாலை, தாலாட்டு, திருப்பள்ளியெழுச்சி, மிருகேந்திரம், சிவஞான சித்தி, ஞானபுராண விளக்கம் முதலியவற்றைப் பாடியுள்ளர்.

(தொடரும்)

பிழைதிருத்தம்.

முன் பகுதி பக்கம் 128 வரி 17-ல், திரு. பெ. செகந்நாதன் அவர்கள் என்பதை, திரு. பொ. செகந்நாதன் அவர்கள் என்றும்; ஷெ பக்கம் வரி 20-ல் சிங்கள அரசன் குணபூஷணன் என்பதை, தமிழ் அரசன் குணபூஷணன் என்றும் திருத்திக் கொள்ள வேண்டும்.

---

14 இவர் தேவாரம் பெரியபுராணம் முதலிய நூல்களிலே தமது பாடல்களைச் சேர்த்துளர் என்பர். இப் பாடல்கள் வெள்ளிபாடல்கள் எனப்படும்.

மதிப்புரை

1. **மாணவர் தமிழிலக்கிய அறிவுத்திரட்டு:**—[ஆசிரியர்கள்: (1) வித்துவான் திரு. வ. தங்கையா நாடாரவர்கள், (2) R. குளோரி கோயில் தங்கம் அவர்கள். விலை ரூ 1-8-0. விலாசம்: ஷை திரு. வ. தங்கையா நாடாரவர்கள், தலைமைத் தமிழாசிரியர், புனிதயோவான் உயர்நிலைப்பள்ளி, பாளையங்கோட்டை.]

இது பள்ளிமாணவர்க்குப் பொதுத் தமிழிலக்கியப் பயிற்சியை வளரச் செய்யும் நோக்குடன் எழுதப் பெற்றது. வாழ்த்து, அறவுரை, தொடர்நிலைச் செய்யுள், பல்சுவை என்ற பகுதிகளில், பழமையும் புதுமையும் வாய்ந்த ஒரு நூறு புலவரும் அவர் இலக்கியமும் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள், போதிய அளவு சுருக்கமாக இதில் காணப்படுகின்றன. கையடக்கமான சிறிய வடிவில் 250 பக்கம் கொண்ட இப்புத்தகம் இத்துறையில் எல்லா மாணவர்க்கும் இன்றியமையாத கருவி என்னலாம். இதிலுள்ள பிழைகள் திருத்தப்பெற வேண்டும்.

2. **தண்டியலங்காரம்; வினு விடை:**— [ஆசிரியர்: ஷை வித்துவான், திரு. வ. தங்கையா நாடார் அவர்களே. விலை: ரூ 3. விலாசம்: ஷை ஷை]

இப்புத்தகம் தன் பெயருக்கேற்ப, தண்டியலங்கார நூல் முழுதும் வினுவிடையாகவே, பரீக்ஷைக்குச் செல்லும் மாணவர்க்குப் பரிவுடன் புகட்டும் நோக்கம் கொண்டது. இதன் முகப்பில், முன்னுரை, ஆராய்ச்சியுரை, மதிப்புரை என்பன, தெரியவேண்டுவன வெல்லாம் குறைவறத் தெளிவிக்கின்றன. மூலமும் குறிப்பும் முன்னே விளங்க, முந்நூறு வினுக்களும் விடைகளுமாக நூற்பொருள் முழுமையும் நன்கு விவரிக்கப் பெற்றுள்ளது. சென்னைப் பல்கலைக்கழகப் பரீக்ஷை வினுக்கள், விடையுள்ள இடம் சுட்டிக்கொண்டு, இதன் பிற்சேர்க்கையாகப் பொருந்தியிருப்பது பயன் தருவதாகும்.

இவ்வாற்றால் பண்டிதர் வித்துவான் புலவர் தேர்வுகளுக்குப் பயிலும் மாணவர், இதனைப் பெரிதும் விரும்பி ஆதரிப்பர். ஆதலின் அவர்களுக்கு இவ்வாசிரியர் செய்த நன்றி பாராட்டுக் குரியது. ஆயினும், நூலிற் புலமை முற்ற நிரம்பக் கசடறக் கற்கும் விழைவினர்க்கு, இஃது ஒன்றே போதிய தன்றென இங்குக் குறிப்பிடுதல் மிகை. இப் புத்தகம் அச்சிட்ட முறையில் எண்ணிறந்த பிழைகள் இடம் பெற்று விட்டன. மிகத் திருத்தமான வேறு பதிப்பு விரைவில் வெளிவரல் இன்றியமையாது.